
# தமிழீழத்தில்

வெளியீடு-3 (செய்திப்பத்திரிகை) ஊக்குவிப்பு 1-

# தமிழீழத்தை நோக்கி.....
# போராட்டம் தொடர்கிறது!

**போர் நிறுத்தம் என்ற போர்வையில் சிறிலங்கா அரசு தன்னை நன்கு பலப்படுத்தி வருகின்றது. திட்டமிட்ட பெரிய இன ஒழிப்பிற்கு முன்னோடியே இது என தீர்க்க தரிசனத்துடன் புரிந்து கொண்ட போராளிகளின் தொடர்ச்சியான தாக்குதல்களால் சிறிலங்கா அரசு நிலைகுலைந்து வருகின்றது, இன்று விடுதலைப்போராட்டம் தமிழீழ எல்லை வரை விஸ்தரிக்கப்பட்டு, ஓர் உன்னத வளர்ச்சியைக் கண்டுவருகின்றது,**

சிங்கள மக்கள் கலந்து வாழுவதும் துரோகிகள்அதிகம் நிறைந்ததும் சிங்களக் காடையர்கள், ஊர்காவல் படைகள், பொலிஸ் நிலையங்கள், இராணுவ முகாம்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பிரதேசங்களாகிய தமிழீழ எல்லைப்புறத்தில் விடுதலைப் போராளிகளால் வேரூன்ற முடியாத சூழ் நிலையேநிலவியது. எத்தனை சிரமங்கள் தியாகங்கள் மத்தியில் இவ் எல்லைப்புற பிரதேசங்கள் விடுதலைப் போராளிகளால் ஊடுருவப்பட்டு, சிறிலங்கா அரசின் ஆக்கிரமிப்பு சக்திகள் படிப்படியாக அகற்றப்பட்டு வருகின்றன.




## 'தூரத்து இடிமுழக்கம்" கேட்டுக் கொண்டேயிருக்கிறது

(1) 4-09-1985

அன்று புளுனைகட வத்த மடு என்ற இடத்தில் ரோந்து சென்ற இராணுவத் தொடர் மீதான தாக்குதலில் 13 பேர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். பெருமளவு ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டது.

(2) 7-09-1985

அன்று தெஹிவத்த என்னுமிடத்தில் இராணுவத் தொடர் மீதான தாக்குதலில் 12 பேர் கொல்லப்பட்டனர். ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

(3) 26-09-1985

பூ ஒொச்சிமுனை கல்லடியில் சிறிலங்கா இராணுவத்தின் புலனாய்வுத் துறையைச் சேர்ந்த விஷேட அதிகாரிகள் ஐவர் கொல்லப்பட்டனர். சித்திரவதைகளில் கை தேர்ந்த இவர்களின் இழப்பினால், புலனாய்வுத் துறை செயற்பாடுகளில் முடக்கம் ஏற்பட்டுள்ளது" ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

(4) 28-10-1985

அன்று வெல்லாவெளி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உட்பட 9 பேர் கொல்லப்பட்டனர். ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

(5) 31- 10- 1985

அன்று பாலம் போட்டாறில் ஜீப் ஒன்றும் ட்றக் ஒன்றும் கண்ணிவெடித் தாக்குதலுக்கு உள்ளானதில் கடற்படை அதிகாரி ஒருவரும் மற்றும் நால்வரும் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர் ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

(6) 01- 11- 1985

அன்று திருக்கோண மடுவில் இராணுவத்தொடர் மீதான தாக்குதல் ஓரளவு வெற்றியே அளித்தது. நால்வரே காயமடைந்தனர். ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன

இத்தகையவீரம் செறிந்த தாக்குதல் முயற்சிகளால் சிறிலங்கா அரச படைகளில் பெரும் அழிவு ஏற்பட்ட அதே நேரம் பெருந் தொகையான நவீன ஆயுதங்களும் சம்பந்தப்பட்ட இயக்கத்தினால் கைப்பற்றப்பட்டது.

4 ஆம் பக்கம் பார்க்க

# இந்தி[ய] அரசின் கபட நாடக வலைக்குள் தமிழினம்!

-தமிழீழக் குரல்-

இந்தி(ய) மத்திய அரசின் சதிநாடகங்கள் இன்று மெல்ல மெல்ல அம்பலத்திற்கு வந்துகொண்டிருக்கிறது. MR. Clean என்று வர்ணிக்கப்பட்டாலும், கொன்று குவிக்கப்படும் எம் மக்களைப்பற்றிக் கருத்திலெடுக்காது தன் ஏகாதிபத்திய விஸ்த்தரிப்புக்காகவே செயற்பட்டு வரும் - ரஜீவ்

இந்த ஏகாதிபத்தியவாதி தன் சதி நாடகத்தின் உச்சக்கட்டமாக சத்தியேந்திரா, சந்திரகாசன் பாலசிங்கத்தை நாடு கடத்தினர். பஞ்சாப் பிரச்சனையில் அவசரப்பட்ட முடிவு ஏற்படுத்திய நெருக்குவாரமே லோங்கோவாலேச் சுட வைத்தது.

சொல்லொணா நெருக்குவாரத்தை தமிழ் இயக்கங்களுக்கு சடுதியாக ஏற்படுத்தி ஓர் சமரச முயற்சியை (இதுதமிழரை திட்டமிட்டே படிப்படியாக அழிக்கும் என்பதில் ஐயமில்லை) தீவிர இன வெறியனை ஜே. ஆர்உடன் ஏற்படுத்த முயன்றதன் பலன் துணைபோன இரு உயிர் ———> - - LO

சடுதியான தீர்வின் முயற்சி தோல்வி ! ! !

நூற்றுக்கு நூறுவீதம் வெற்றி பெற்றேன்.

எனவே தமிழ்நாடு தனக்குக் கீழ் என நினைத்து 3 பேரை நாடு கடத்தி, மூக்குடைந்து திருப்பி அழைத்து- - - - - -

ரஜீவ்- அவசரபுத்திக்காரன் என்பதில் ஐயமில்லை. ரஜீவிற்கு--

"தானுட மறந்தாலும் தசையாடும்", என்பது தமிழ் இனப் பழமொழி. உங்களுக்குத் தெரியாது. நாம் இங்கு அநுபவிக்கும் அடக்கு முறை; தென்னுபிரிக்காவை விட மோசமானதாகும்.

விடுதலைப் போராளிகள் போராடுவது கொலை வெறிக்கல்ல. தம் இனத்தைப் பாதுகாக்கவே தம் உயிரைக் கொடுக்கிருர்கள்.

உங்கள் ஏகாதிபத்திய நோக்கிற்கு தமிழீழம் அமைவது த டை க ல் லா க லா ம். ஆனல் மனித நேயத்துடன், மனித நோக்குடன் சிந்தியுங்கள்.

எனவே

அங்கீகரியுங்கள்! அங்கீகரியுங்கள்!! அங்கீகரியுங்கள்!!!

ஆனல்

இந்த மண்ணில் போராடும் அனைவருக்கும் போராளிக்குரிய தகைமையில்லை. ஏமாற்றுக்களும், சுத்துமாத்துக்களும், பம்மாத்துக்களும் நெடுநாள் நிலைக்காது.

எதற்கு ஆயுதம் எடுத்தோம் ஏன் போராடுகிறோம் என்பது என்னவென்று தெரியாத சிலவும் ஆயுதத்தோடு திரிகின்றன. தொடர்ச்சியாக சமூக விரோத செயற்பாடுகளில் ஈடுபடுதல் மட்டுமன்றி மக்களின் உணர்வுகளை சிறிதும் மதியாத மந்தைகளும் தாமும் இயக்கம்(!) தானும். சிறு சிறு கும்பல்களும் இயங்குகின்றன. இவற்றையிட்டு விரக்தியடைவது விவேகமாகாது.

அடித்துக் கூறுகிறோம்

போராட்டம் இயல்பாக இவற்றை செப்பனிடும். விலகுவன விலகி உடைவன உடைந்து அழிக்கப்படுவன அழிக்கப்பட்டு விடுதலைப் போராட்டம் தொடரும்.

மக்களின் முழு ஒத்துழைப்பும் இதற்கு கிடைத்து வருவதும் மக்கள் உண்மைநிலை உணர்ந்து வருவதும் கண்கூடு.

3. 12. 85 ஈழநாடு நமது நோக்கில்

பாராட்டுக்குரிய பராக்கிரமம் தொடர வேண்டும் (அவலங்கள் அளவு கடந்த நிலையில் உவ்விடம் நடைபெறும் காடைத்தனத்தை நிறுத்த நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்று சவால் விடுவதும் அரசின் பாசாங்கு. பொது மக்கள் ஆதரவும் அநுதாபமும் போராளிகளின் எந்த ஒரு செயலுக்கும் அத்தியாவசியம்.

எனவே இப்போராட்டத்திற்கு காலன்போல அமைந்த இச்செயற்பாடுகளுக்கு எம் மத்தியில் வாழும் குண்டர்களே பொறுப்பென்பதைப் பொது மக்கள் போல் போராளிகள் உணர்ந்து செயற்படும் அவசியத்தை எவ்வகையிலும் தட்டிக்கழிக்கமுடியாது.

குளிக்கப்போய் சேறு பூசிக்கொண்டு வருவது எதனைக் காட்டும். தங்கள் வருங்காலத்தை தங்கள் உயிரை அர்ப்பணிக்க முன்வந்த போராளிகள் மக்களின் ஆதரவிற்குப் பங்கமான செயல் எதனையும் அனுமதியாது நடந்தால் அரசாங்கம் காணும் கனவு பலிக்காது. இதனைப் பொது மக்கள் உணர்வது அவசியம்.)

எனவே திருந்துவோம்! புனரமைப்போம்!

ஒன்றிணைந்து போராடுவோம்!

வெற்றி பெறவேண்டும் என்பதே எமது அவா, எமது நோக்கு, எமது இலட்சியம்.

ஒத்துழையுங்கள்! ஒத்துழையுங்கள்!!

ஒத்துழையுங்கள்!!!

இந்த மண்ணிற்காக, மக்களுக்காக.

இந்த மண்ணில் உதித்த அனைவருக்கும் மண்ணின் கடமைகள் இருக்கின்றன. எனவே

தயவாக - - - - விடுதலையை நோக்கி - - - -

# திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களும் அதன் மீதான எதிர் நடவடிக்கைகளும்

-ஓர் ஆய்வு-

ஆங்கிலேயரிடமிருந்து இலங்கை விடுதலையடைந்த காலம் முதல் இன அடக்கு முறையின் வடிவம் அதிகரித்தே வந்துள்ளது. முழு நாட்டையும் சிங்கள மயமாக்கும் நோக்குடன் பதவிக்கு வந்த அத்தனை சிங்கள அரசாங்கங்களும் ஒன்றை ஒன்று மிஞ்சி ஒற்றுமையாக திட்டமிட்ட ரீதியில் செயற்பட்டன. தமிழ்த்தேசிய இனத்தின் அடிப்படை உரிமைகள் அனைத்தும் மறுக்கப்பட்டன. இது ஓர் பௌத்த சிங்கள நாடு என்பதை அடிப்படைத் திட்டமாகக் கொண்டே செயற்பாடுகள் நடைபெற்றன.

ஆங்கிலேயரிடமிருந்து மட்டும் இம் மண் விடுதலையடைந்த காலத்தில் சுமார் 8000 சதுர மைல் தமிழ்பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசமாக இருந்து வந்தது. ஆனால் சுமார் 35ஆண்டுகால இடைப் பகுதியில் 2000 சதுர மைல் பகுதிவரை திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தால் பறிபோய் விட்டது. இதே நிலை தொடர்ந் திருப்பின் கால ரீதியில் முழு நாடும் சிங்களக் குடியேற்றத்தால் சிங்கள மயமாக்கப்பட்டிருக்கும்.

ஓர் தேசிய இனத்திற்கு மொழியோடு நிலம் மிக மிக இன்றியமையாததாகிறது. ஆனால் எம் மூதாதையர் மொழி மொழி என்று கத்தினார்களேயொழிய (கத்துவதோடு சரி) நிலத்தைப் பற்றி எண்ணவில்லை.

35 வருடம் 8000 சதுர மைலில் இருந்து 6000 சதுர மைலாககுறைந்த தமிழ்பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசம் தொடர்ந்தும் பறிபோகக் கூடிய முயற்சிகள் தற்போதைய இனவெறி அரசாங்கத்தாலும் மேற்கொள்ளப்பட்டு வந்தது. ஆனால் தீர்க்கதரிசனம் மிக்க விடுதலைப்போராளிகளின் செயல் ரீதியான எதிர் நடவடிக்கைகளால் திட்டமிட்ட சிங்களக் காடையர் குடியேற்றம் தடுத்து நிறுத்தப்பட்டது.

எமது மண் சிங்கள காடையர் குடியேற்றத்தால் பறிபோக முடியாத நிலை ஏற்பட்டது விடுதலைப் போராட்டத்திற்கு கிடைத்த பெரு வெற்றியாகும்.

தமிழீழ விடுதலைப் போராட்டம் ஆயுத ரீதியில் முன்னெடுக்கப்பட்டதன் காரணமே அகிம்சை ரீதியான போராட்டத்தின் தோல்வியிலானதாகும். தீவிர இனவெறியனான ஜே. ஆர் உடனோ அல்லது சிங்கள அரசாங்கங்களுடனோ "இது எமது பாரம்பரிய பிரதேசம் இங்கு சிங்கள காடையர் குடியேற்றத்தை ஏற்படுத்தி வருவது எம் இனத்தை அழிப்பதற்கே எனவே உடன் இவற்றை கைவிடுங்கள்" என எமது உரிமையை - நியாயத்தைப் பற்றி வாய்கிழிய கத்துவதால் எதுவித பயனுமில்லை என்பது தெளிவு.

இவை பற்றி குடியேற்றப்பட்ட சிங்கள காடையரிடம் எடுத்து விளக்கப்படுத்தியது தோல்வி!

தமிழ் இன திட்டமிட்ட ஒழிப்பைத் தடுக்க இந்த சிங்கள சமூகத்திலிருந்து விடுபட்ட அநாகரீக கூட்டங்களை சுட்டுக் கொல்லுவதோ அல்லது சுட்டு விரட்டுவதோ போராட்ட வளர்ச்சிப் போக்கில் மிக மிக முக்கியமானதாகிறது. இந்த வகையில் கடந்த வருடம் டொலர் கென்ற்பாமில் இருந்த ஆயுதம்தரித்த காடையர் கூட்டம் அழிக்கப்பட்டது. கொக்கிளாய் நாயாறு திட்டமிட்ட குடியேற்றங்கள் சுட்டு விரட்டப்பட்டது.

இந்த வெற்றிகரமான நடவடிக்கை விடுதலை போராட்டத்தில் ஓர் முக்கிய திருப்புமுனையாக அமைந்தது. வடக்கிலிருந்த திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்கள் தம் பழைய இடங்களுக்கு திரும்பத் தொடங்கின. சிங்கள இனத்திடமிருந்து எம் மண் மீட்கப்படத் தொடங்கப்பட்டது.

நாம் சிங்கள மக்களுக்கு ஓர் போதும் எதிரிகளல்லர். ஆனால் எமது பிராந்திய ஆக்கிரமிப்பை எம்மீதான அடக்கு முறைக்கெதிராக போராட வேண்டியது எம் பணியாகின்றது. ஆரம்பத்தில் தலைமறைவாக இயங்கி வந்த விடுதலைப் போராளிகள் இன்று மக்கள் மத்தியில் மக்களுடனேயே போராட்டத்தை முன்னெடுக்கின்றனர்.

இந்நிலையில் தமிழ் பிராந்தியத்தில் வாழும் சிங்கள மக்கள் சிறிலங்கா இராணுவத்திற்கு விடுதலைப் போராளிகளை காட்டிக் கொடுக்க மாட்டார்கள் என்பதற்கு எவ்வித உத்தரவாதமுமில்லை- எனவே விடுதலைப் போராட்டம் விஸ்தரிக்கப்படும் சூழ்நிலையில் சிங்கள மக்கள் எம் பிராந்தியத்திலிருந்து அகற்றப்படவேண்டிய சூழ்நிலை ஏற்படுகின்றது.

மேலும் திட்டமிட்டப்பட்டு ஏற்படுத்தப்பட்ட சிங்கள குடியேற்றத்தால் தமிழீழப் பிராந்தியத்தில் போராளிகள் இயல்பாக நடமாட முடியாதசூழ்நிலை ஏற்படுகின்றது.

இன்று இத்தகைய தாக்குதல் முயற்சிகள் விடுதலைப் போராளிகள் விடுதலைப் போராட்டத்தை தொடர்ந்தும் வெற்றிகரமாக முன்னெடுக்க பெருமளவு உதவிகள் புரிந்துள்ளது.

இவையெல்லாவற்றையும் ஓர் சில சக்திகள் நன்கு தெளிவாக புரிந்து கொண்டாலும் சர்வதேசிய மட்ட சுய இலாபத்தை மாத்திரம் கருத்திற் கொண்டு செயற்படுவது பெரும் வேதனைக்குரியதாகும்.

விடுதலைப் போராட்டத்தை நீண்ட கால கண்ணோடு நோக்கிய தாய் இயக்கத்தின் நடவடிக்கையை ஆரம்பத்தில் சுய இலாபம் கருதி பலர் கண்டித்தாலும் இன்று உண்மை நிலையை உணர்ந்து அவர்களும் செயற்படுவது வரவேற்கத் தக்கதாகும்.

ஆனால் "E.N.L.F. சிங்கள மக்களை கொல்கிறது" என இயக்க கட்சியான PLOT சொல்வது வருந்தத் தக்கதே.

டொலர் கென்ற் கொக்கிளாய் நாயாறு தாக்குதலின் பின்பும் சிங்களக் காடையர்களை ஆயுதங்களுடன் குடியேற்ற பல முயற்சிகள் இனவெறி அரசால் மேற்கொள்ளப்பட்டன.

புதிதாக நிறுவப்பட்ட இராணுவ முகாமை மையமாகக் கொண்டு சிங்கள காடையரை ஆயுதங்களுடன் குடியமர்த்த மேற்கொள்ளப்பட்ட முயற்சி கொக்கிளாய் இராணுவ முகாம் தாக்குதலை தொடர்ந்து கைவிடப்பட்டது. பின்பும் சிங்கள காடையரை தமிழ் பிராந்தியத்தில் ஆயுதங்களுடன் குடியமர்த்த பல பகீரத பிரயத்தனங்கள் மேற்கொள்ளப்பட்டன.

ஆனையிறவுக்கும் வவுனியாவிற்குமிடையே 2 லட்சம் சிங்கள மக்களைக் குடியேற்றுவேன் என்று லலித் சொன்ன சமயம் தமிழீழப் பிராந்தியத்திற்கு அப்பால் சிறிலங்காவிலும் விடுதலைப் புலிகளின் தாக்குதல் இடம்பெற்றது. மன்னார் பிராந்தியத்தை நிர்மூலமாக்கிய மதவாச்சிப் பகுதி காடையரை எச்சரிக்கும் முகமாக மதவாச்சி புகையிரத நிலையத்தையும் அரச கட்டிடங்களையும் பொலிஸ் நிலையமும் தாக்கப்பட்டது.

தொடர்ந்து நிர்மூலமாக்கப்பட்ட பொலிஸ் நிலையத்தையும் மீறி செயற்பட முயன்ற லலித்திற்கு மிகச் சிறந்த முறையில் பாடம்படிப்பிக்கப்பட்டது. சகல வீராப்

(4 ஆம் பக்கம் பார்க்க...)

# வெற்றி "அலைகள் ஓய்வதில்லை"

**தமிழீழம் (1) இல் வெளிவந்தபடி 2.9.85 இலிருந்து 8.10.85 வரை ஏருவூர் பொலிஸ் நிலையத் தகர்ப்புட்பட 10 வெற்றிகரத் தாக்குதல்கள் இவ் இயக்கத்தினால் மேற்கொள்ளப்பட்டது.**

(11) 8-10-85ல் மன்னாரில் சிறுநாவற் குளத்தில் 2ஜீப் 4றக் சகிதமான இராணுவ ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த சமயம் விடுதலைப் போராளிகளின் திடீர்த் தாக்குதலால் முன் வந்த 2ஜீப் முற்றாக சேதமடைந்தது. இதில் 6 இராணுவத்தினர் பலியாகினர். பலருக்கு பலத்த காயமேற்பட்டது.

(12) 13-10-85 ல் முல்லைத்தீவில் அலம்பிலில் இராணுவத் தொடரின் மீதான கண்ணிவெடித் தாக்குதலில் முன் வந்த ஜீப் முற்றான சேதம். 6இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் என அறியக் கிடக்கிறது

(13) 29-10-85 ல் வவுனியா நொச்சிக் குளத்தில் இராணுவ தொடரின் மீதான திடீர்த் தாக்குதலால் இராணுவத்திற்கு பாரிய இழப்புகள் ஏற்பட்டது. 9இராணுவத்தினர் பலியான அதே சமயம் பல இராணுவத்தினர் பலத்த காயத்திற்குள்ளாகினர்.

அதே தினம் திருமலையில் இராணுவ முகாமிற்கான மின் கோபுரங்கள் தகர்க்கப்பட்டன.

(14) 4-11-85 ல் மட்டக்களப்பு செங்கலடியில் ஒரு ஜீப்பில் சென்ற கொமாண்டோக்கள் மீது கைக்குண்டு வீசியபோது மூவர் படுகொலை செய்யப்பட்டனர்.

(15) 6-11-85 ல் மட்டக்களப்பு வாகரையில் 1 லொறி 2 ஜீப் வாகனங்களில் சென்ற இராணுவத் தொடர் மீதான தாக்குதலில் ஜீப் வண்டி கண்ணி வெடித் தாக்குதலால் முற்றான சேதமடைந்தது.

அதில் சென்ற அனைத்து இராணுவ வீரரும் கொல்லப்பட்டனர் பின்னர் கிடைத்த தகவலில் ஜீப்பில் 7 இராணுவத்தினர் இருந்தனராம்.

(16) 7-11-85 ல் பரந்தன் பூநகரி வீதியில் 25 வாகனங்களைக் கொண்ட இராணுவத் தொடரில் அனைத்திற்கும் முன்பு வந்த இ.போ.ச பஸ்ஸிற்கு குறி வைத்த கண்ணி வெடித் தாக்குதலில் 5 இராணுவத்தினர் பலியானார்கள். 10பேர் படுகாயமடைந்தனர்.

(17) 8-11-85 ல் மன்னாரில் 3 இராணுவ வாகனங்களில் சென்ற இராணுவத் தொடர் மீது விடுதலைப் போராளிகள் நன்கு திட்டமிட்ட தாக்குதலை மேற்கொண்டனர்.

ராக்கெட் தாக்குதலில் ராக்கெட் 2 ஜீப் வண்டிகளில் சரியான வகையில் பட்டு வெடித்தது. இதைத் தொடர்ந்து சரமாரியாக விடுதலைப் போராளிகள் மேற்கொண்ட துப்பாக்கி வேட்டுக்களால் அத் தொடர் பூரணமாக சேதப்படுத்தப்பட்டது.

(18) 14-11-85 ல் வவுனியாவில் நீராவிப்பிட்டியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட 1ஜீப் 2றக் மீதான தாக்குதலில் 4பேர் ஸ்தலத்திலே கொல்லப்பட்டனர். 6பேர் படுகாயம் இதில் ஓர் ஜீப் வண்டியும் முற்றாகச் சேதமடைந்தது.

(19) 16-11-85 ல் மட்டக்களப்பில் ரோந்து நடவடிக்கையிலீடுபட்ட 3ஜீப் வண்டிகளில் முன் வந்த ஜீப்பிற்கான கண்ணி வெடித் தாக்குதலில் 6கொமாண்டோக்கள் கொல்லப்பட்டனர்.

(20) 18-11-85 ல் வாழைச்சேனை மட்டக்களப்பில் வாஜென்றில் வந்த பொலிஸ் கொமாண்டோக்கள் மீதான கைக்குண்டு வீச்சில் 2பேர் பலி. சிலருக்கு காயமேற்பட்டது.

(21) 27-11-85 ல் சம்பூர் மூதூரில் போராளிகளின் முகாமை இராணுவம் சுற்றி வளைக்க முற்பட்ட போது நடந்த நேரடிமோதலில் 3 இராணுவத்தினர் பலி. பலர் காயம். விடுதலைப் போராளிகள் பக்கம் இழப்பேதுமில்லை.

# "தூறல் நின்று போச்சு" அல்ல தொடர்கிறது

(1) 30-9-85 ல் முப்படைகளாலும் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள வன்னி மண்ணில் விடுதலைப் போராளிகளின் வீரம் செறிந்த நடவடிக்கையின் உச்சக்கட்டமாக வவுனியா பொலிஸ் நிலையம் தகர்க்கப்பட்டது. இதில் அரசபடையினர் பக்கம் பாரிய உயிர்ச் சேதம் ஏற்பட்டது

(2) 24-10-85 ல் செட்டிக்குளத்தில் இராணுவத்தொடர் மீதான கண்ணிவெடித் தாக்குதலில் 5 இராணுவத்தினர் பலி

# வெற்றிகர - "பயணங்கள் முடிவதில்லை"

(1) 13-11-85 ல் மட்டக்களப்பில் இராணுவத் தொடர் மீதான வெற்றிகாமான கண்ணிவெடித் தாக்குதலில் ஒரு ஜீப் வண்டி முற்றாக சேதமடைந்தது இதில் பல அரச படையினர்க்கு உயிர்ச்சேதம் ஏற்பட்டிருக்கலாம்.

---

(3ம் பக்க தொடர்ச்சி)

பையும் கைவிட்டு காலடியில் விழ வைத்தது. இத்தகைய முயற்சிகள் கிழக்கிற்கும் விஸ்தரிக்கப்பட்டு வருகின்றன.

விடுதலையின் போக்கில் எல்லைப்புற பிராந்தியத்தை நோக்கிய போராளிகளின் நகர்வு இன்றியமையாதது, போராளிகளோடு மக்களும் இம்மண்ணிலிருந்தே போராடுவது முக்கியமானது. எல்லைப்புற பிராந்தியங்களை விட்டு இடம் பெயர்வதால் ஏற்படும் வெற்றிடம் ஆபத்தானது.

குடா நாட்டில் சனசெறிவு வீதம் மிக உயர்ந்து வருகிறது. ஏனைய பிராந்தியங்கள் வெற்றிடமாகி வருகின்றது. போராட்ட சூழ்நிலைக்கேற்ப வாழும் சூழலைக் கொண்ட பிராந்தியங்கள் மத்தியிலும் கிழக்கிலும் வெற்றிடமாகவுள்ளன.

எனவே மக்கள் அதை நோக்கி நகர வேண்டும். வேதனையும் துயரமும் நிறைந்ததே விடுதலைப் போராட்டம் எமது பாரம்பரிய பிரதேசம் முழுவதையும் மீட்பது மிக முக்கியமானது. போராளிகளுடன் மக்களும் இதற்கான வேலைத் திட்டத்தில் இறங்கினாலேயே எம் எதிர்காலச் சந்ததிகளின் சுபீட்சமான வாழ்வுக்கு வழி வகுக்கலாம்